சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை தொடர்ச்சி செய்யப்படுகிறது.

பு.த.சா.1 ஜீவானந்தம், த /பெ கந்தசாமி, வயது.50

**குற்றம் சாட்டப்பட்டவர் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி.-**

குற்றம் சாட்டப்பட்டவர் மீது மாண்புமிகு கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றத்திலும், மாண்புமிகு சார்பு நீதிமன்றத்திலும், நெடுமாறன், சரவணன், நடராஜன் மற்றும் அம்பேத்கர் ஆகியோர்கள் இதே போன்ற காசோலையை வைத்து சிவில் வழக்கு தாக்கல் செய்துள்ள விவரம் தெரியுமா என்றால் தெரியாது. இந்த வழக்கில் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பிய அதே வழக்கறிஞர் தான் மேற்படி வழக்கையை நடத்தி வருகிறார் என்றும், எனக்கு விவரங்கள் தெரிந்தும் வழக்கிற்காக தெரியாது என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல. நானும் மற்ற புகார்தாரர்கள் ஆகியோர்கள் எதிரியுடன் சேர்ந்து நிதி நிறுவனம் நடத்தி வந்தோம் என்றால் சரியல்ல. 1வது பங்கு தாரராக நானும், 7 வது பங்கு தாரராக வாசு என்பரும், 8வது பங்குதாரராக அம்பேத்கார் என்பரும் பதிவு எண். 881/2013 என்ற பதிவு எண்ணில் ஸ்ரீ லட்சுமிசரஸ்வதி பைனான்ஸ் என்ற பெயரில் தொழில் செய்து வந்துள்ளோம் என்றால் எனக்கு தெரியாது. என் மனைவியின் பெயர் ரேவதி என்றால் சரிதான். என் மனைவி நிதி நிறுவனத்தில் பங்கு தாரராக இருந்துள்ளாரா என்றால் இல்லை. பதிவு எண். 569/2016 என்ற பதிவு எண்ணில் லட்சுமிசரஸ்வதி பைனான்ஸ் என்ற பெயரில் உள்ள நிதிநிறுவனத்தில் என் மனைவி ரேவதி 1வது பங்குதாரர் என்றும், வாசு என்பவர் 4வது பங்குதாரர் என்றும், எதிரி 5 வது பங்கு தாரர் என்றும் பதிவு ஆகி உள்ளது என்றால் இல்லை. நான் மேற்படி விவரங்கள் தெரிந்துக்கொண்டு தற்போது வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் எதிரியிடம் சீட்டு கட்டியபோது என் மனைவியிடம் தற்போது என்னிடம் காட்டப்படும் ஆவணம் போல் 6, 7 கையொப்பங்கள் எதிரி பெற்றுள்ளார். மேலும் காசோலைகள், பாண்டு பத்திரங்கள் மற்றும் ஆதார்கார்டு நகல் ஆகியவற்றையும் கூட எதிரியிடம் கொடுத்துள்ளோம். மேற்படி ஆவணங்களை 2012, 2013 ஆண்டுகளில் இருந்து கொடுத்து வந்துள்ளேன். என் மனைவியின் பெயரில் சீட்டு எடுத்தேன் பணம் நான் தான் செலுத்தி வந்தேன். மேற்படி வாசு உள்ளிட்ட மற்ற வழக்கின் வாதிகலும், மேற்படி சீட்டில் பங்கு கொள்வார்களா என்றால் எனக்கு தெரியாது. எதிரி என்னிடம் நான் செலுத்திய சீட்டிற்குண்டான

பணம் கொடுத்துவிட்டார். நாங்கள் கையொப்பம் செய்து கொடுத்த ஆவணங்கள் அனைத்தும் எதிரியிடம் இருந்து பெற்றுக்கொண்டோமா என்றால் இல்லை. நான் செலுத்தியதாக சொல்லப்படும் சீட்டு குறித்த விவரங்களை வழக்கிலும், சாட்சியத்திலும் சொல்லவில்லை என்றால் சரிதான். எதிரி திருப்பி கொடுக்காத ஆவணங்களை கேட்டு அறிவிப்பு கொடுத்துள்ளேன் என்றால் இல்லை. எதிரி எந்த சீட்டு நிறுவனமும் நடத்த வில்லை என்றும் நாங்கள் அனைவரும் கூட்டாக நடத்தி வந்த நிதி நிறுவனத்தில் அவருடைய காசோலையை எடுத்துக்கொண்டு பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளளேன் என்றால் சரியல்ல. நான் தவறான வழக்கு தாக்கல் செய்துள்ளதால் வழக்கு தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

Signature of Witness.